## முதல் நிலை

வாசகம்:

பிலாத்து அவர்களிடம் "அப்படியானால் மெசியா என்னும் இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான். அனைவரும் "சிலுவையில் அறையும்" என்று பதிலளித்தனர். அதற்கு அவன் "இவன் செய்த குற்றம் என்ன?" என்று கேட்டான். அவர்களோ "சிலுவையில் அறையும்" என்று இன்னும் உரக்க கத்தினார்கள். அப்போது அவன் பரபாவை அவர்கள் விருப்பத்திற்கிணங்க விடுதலை செய்தான். இயேசுவை கசையால் அடித்துச் சிலுவையில் அறையுமாறு ஒப்புவித்தான்.

சிந்தனை

வெளி வேடமாகப் பேசுகிறவர்களை விட்டுவிடுகிறீர்கள். வெளிப்படையாக பேசிய என்மேல் விசாரணை வைக்கிறீர்கள். கட்டுகளை அவிழ்த்துப்போக விடுங்கள் என்றேன். கட்டுகளை அவிழ்க்க வந்த என் கரங்களையே கட்டிவிட்டீர்கள். வேண்டாம் உங்கள் வெளிவேட விசாரணைகள். என்னுடைய ஆதங்கமெல்லாம் உங்கள் அநியாயத் தீர்ப்பு என்னோடு முடிந்து விடட்டும் என்பதே. உங்களது இழிவான பேச்சுக்களால் எத்தனை மொட்டுக்கள் சருகாயிருக்கின்றன. தவறான உங்களது வார்த்தைகளால் எத்தனை தற்கொலைகள் அரங்கேறியிருக்கின்றன. தீய சொற்களால் எத்தனை உள்ளங்கள் தீய்ந்து போயிருக்கின்றன. ஆதாயத்திற்காக அடுத்தவர்களை குற்றவாளிகளாக்கிய பிலாத்துவாக நடந்து கொண்ட வேளைகளை நினைத்துப் பார், நமக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக பழிவாங்க வேண்டும் என்ற முயற்சித்த நேரங்களை நினைத்துப் பார்.
போதும் சகோதரமே. போதும் உங்கள் வார்த்தைகள். உங்கள் இனிமையான பேச்சுகள் இதயங்களை எழுப்பட்டும், உங்கள் கனிவான வார்த்தைகள் கலங்கிய உள்ளங்களை தேற்றட்டும்.

செபம் 1: அன்பான இயேசுவே! நாங்களும் எங்கள் அன்றாட வாழ்வில் நடைபெறும் அநீதத் தீர்ப்புக்களை தட்டிக்கேட்காது பணம் - பதவி- உறவு என்பதற்காக ஒதுங்கி இருந்தும், அநீதிக்குத் துணைபோகவும் செய்திருக்கிறோம். அதற்காக உம்மிடம் மன்னிப்புக் கேட்கிறோம். இனிமேலாவது அநீதியின்பக்கம் நிற்காது நீதியின் பக்கம் நிற்க நல்ல மன தைரியத்தை எங்களுக்கு தந்தருளும்.

## 2-ம் நிலை

வாசகம்

பின்பு அவர் அனைவரையும் நோக்கி என்னைக் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில்தம் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவர். என் பொருட்டுத் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக்காத்துக்கொள்வர்.

நிகழ்வு: 1999 – ம் ஆண்டு பிப்ரவரி மாதம் திருவைகுண்டம் அருகே வாழைக்காய் ஏற்றி வந்த லாரி வயல்காட்டு சேற்றில் கவிழ்ந்தது. 19 – பேர் உயிரோடு புதைந்தனர். இதில் 12 பேர் பள்ளிக்குச் செல்லும் மாணவ – மாணவிகள் படிப்போடு பிழைப்புக்காக பணி செய்தவர்கள். அவர்களில் ஒருவனின் பெயர் சேவியர், 12 – ம் நிலை படித்துக் கொண்டிருந்த மாணவன், லாரி கவிழ்ந்த உடனே தனக்கு கிடைத்த ஒரு சின்ன இடைவெளியின் வழியே வெளியே வந்தான். தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஓடிவிடாமல் லாரியிலிருந்து வெளியே வருவதற்கு முயன்று கொண்டிருந்த தன்னுடைய

பள்ளியின் சக தோழர்கள் ரிக்கோ, ஜேக்கப், மரியா மற்றும் மாணவி லதா ஆகியோரைப் பார்த்தான். வாழ்வுக்காகப் போராடிக் கொண்டிருந்தவர்களை அப்படியே விட்டு விட்டு செல்ல மனம் வரவில்லை. மீண்டும் சேற்றில் குதித்தான். அந்த நான்கு பேரைக் காப்பாற்றப் போராடினான். நீண்ட நேர போராட்டத்திற்குப் பின் மூன்று பேரும் காப்பாற்றப்பட்டனர். ஆனால் லட்சுமணன் சேற்றிலே மாட்டிக் கொண்டு வெளியேற முடியாமல் இறந்துப் போனான்.

சிந்தனை: யாரெல்லாம் அடுத்தவரின் நலனுக்காக துன்பத்தை தாங்கிக் கொள்கின்றார்களோ, சுமைகளை ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்கள் எல்லாம் இயேசுவைப் போல சிலுவையை சுமக்கின்றவர்களே, இயேசு சிலுவை சுமந்தது தனக்காக அல்ல. நமக்காக. இன்று நம்மை சுற்றி ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்வுக்காகப் போராட்டத்தில் முட்டி மோதி நொந்து கிடக்கிறார்ளே, நாம் என்ன செய்திருக்கிறோம். நமக்கு ஏன் வம்பு என்று நம்மையே சமாதானப்படுத்திக் கொண்டு சென்றிருக்கிறோமே ஒழிய என்னால் முடிந்ததை அவனுக்கு செய்வேன் என்ற மனம் நம்மிடம் இல்லாமல் போனது ஏன்? அடுத்தவரை அன்பு செய்தோம் என்றால் அடுத்தவரின் சுமையை சுமப்பதிலும் ஒருவரின் சுமையை சுமப்பதிலும் ஒரு சுகமுண்டு என்பதை உணர்ந்துக் கொள்வோம்.

## 3-ம் நிலை

வாசகம்

மெய்யாகவே அவர் நம் பிணிகளைத்தாங்கிக் கொண்டார். நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார். நாமோ அவர் கடவுளால் வதைக்கப்பட்டு நொறுக்கப்பட்டார் என்றும் சிறுமைப்படுத்தப்பட்டார் என்றும் எண்ணினோம். அவரே நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார். நம் செயல்களுக்காக நொறுக்கப்பட்டார். நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார். அவர் தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம்.

நிகழ்வு: பெரியார் மாவட்டம் கோபிக்கு அருகே உள்ள கிராமத்தின் பெயர் பெரிய பாட்டுப்பாளையம், சின்ன வயதிலேயயே போலியோ நோயினால் தாக்கப்பட்டு தன்னுடைய இடது காலை இழந்தான் ٰ. கால் போய் விட்டதே என்று கவலைப்பட்டு மூலையிலே உட்கார்ந்து விடாமல் கைத்தடி ஒன்றின் உதவியால் நடக்கத் தொடங்கினான். தொடக்கப்பள்ளி , உயர்நிலைப்பள்ளி, கல்லூரிப்படிப்பு என கல்வியைத் தொடர்ந்தான் கல்லூரியில் படித்துக் கொண்டே மாலை நேரத்தில் வீட்டில், உள்ளூர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து வரும் மாணவ மாணவிகளுக்கு டியூசன் எடுத்து வருகிறான். பணத்தை சம்பாதிக்க வேண்டாம் என்று எண்ணாமல் ஏழை எளியவருக்கு உதவிட வேண்டும் என்ற எண்ணத்தில் தனிப்பட்ட கவனத்தை செலுத்தி கல்வியை கற்றுத் தருகிறான்.

சிந்தனை: உடலில் ஊனமுற்றவர்கள் கூட நிறைய சாதித்திருக்கிறார்கள். ஆனால் உள்ளத்தில் ஊனமுற்றவன் எப்போதும் எதையுமே சாதிக்ப்போவதில்லை. இன்றைய சமுதாயத்தில் உடலில் ஊனமுற்வர்களை விட உள்ளத்திலே ஊனமுற்று முடங்கிப் போனவர்களும், முடமாகிப் போனவர்களும் தான் அதிகம். தாழ்வு மனப்பான்மையாலும், தன்நம்பிக்கையை தொலைத்ததாலும் முயன்று பார்பாபோம். முடிந்தவரை முட்டி மோதுவோம் என்று முயற்சி எடுப்பதில்லை. தோல்விகள் வந்தாலும் கேள்விகள் எழுப்பு, பதிலையும், வழியையும் கண்டுபிடி வாழ்க்கை வசப்படும்.

செபம் 3 : எங்கள் இனிய இயேசுவே! எங்களது இயலாமையால், அறியாமையால், பிறர் வாழ வழிகாட்டியும் அவ்வழி காட்டலைக் கேட்க மனமில்லாது பல்வேறு தீமைகளில் பீழ்ந்து கிடக்கும் எங்களுக்கு பிறரையும் வாழவைக்கவும், நாங்கள் இறைநம்பிக்கையற்ற

நிலையில் வீழ்ந்து கிடப்பவர்களை மேலும் தள்ளிவிடாமல் உம் வல்லமையால் கை கொடுத்து தூக்கிவிடும் அருள் தாரும்.

## 4 –ம் நிலை

வாசகம் : மகளே! எருசலேம் உன் சார்பாக நான் என்ன சொல்வேன்? உன்னை எதற்கு ஒப்பிடுவேன் மகள் சீயோனே கன்னிப்பெண்ணே யாருக்கு உன்னை இணையாக்கித் தேற்றுவேன் உன்னை? உன் காயம் கடலைப் போல் விரிந்துள்ளதே உன்னைக் குணமாக்க யாரால் முடியும்?

நிகழ்வு: அரசாங்க மருத்துவமமையில் நோயோடு படுத்துக் கிடந்த ஒரு வயதான தாய் தன் மகளை அழைத்து உன்னுடைய அண்ணன்களை என்னை வந்து பார்க்கச் சொல்லு. நான் இனிமே பொழைக்கமாட்டேன்னு தெரியுது, கடைசியா ஒரு தடவை பார்க்கனும் போல இருக்கு என்றார். கணவன் இறந்த பின்பு தனது 2 மகன்களையும், மகளையும் கரை சேர்க்க மாடாய் உழைத்து ஓடாய் தேய்ந்துப் போனவள், 2 பிள்ளைகளும் திருமணமான உடனே தனிக்குடித்தனம் போய்விட்டதால் சாப்பாட்டுக்குக்கூட வழியில்லாமல் பட்டினி கிடந்து நோய்வாய்ப்பட்டவள் பல தடவை தொலைபேசி வழியாக தங்கை தனது அண்ணன்களிடம் தொடர்பு கொண்டு தகவலை சொன்னாள். நான் ஆசையாய் வளர்த்த பசங்க என்னை வந்து பார்க்கவே இல்லையே. தாய் உயிரோடு இருந்த போது வந்து பார்க்காத பிள்ளைகள் பின்பு தாய்க்கு மாலை போட வந்து சேர்ந்தார்கள்.

சிந்தனை: இயேசுவைப் போல பாரமான சுமைகளோடும், மன வேதனைகளோடும் நம்மை சுற்றி பல பேர் நடமாடிக் கொண்டிருக்கின்றார்கள் உன்னுடைய ஆறுதலான வார்த்தைக்காக, அன்பான பேச்சுக்காக பாசமான உன் கைகளுக்காக, இவர்களின் ஏக்கக் குரல் என் இதயத்திற்குள் கேட்காதது ஏன்? அன்னை மரியாள் போல சக்தி கொடுக்க, சங்கடத்தை போக்க, சந்தோஷத்தை கொடுக்க, அடுத்தவர்களை சந்திக்க முன்வருவாயா?

செபம 4: இன்று நம் குடும்பங்களில் தாய்-சேய் உறவுகள் பலபடவும், அன்னையர் தமது குழந்தைகளின் மட்டில் உள்ள பொறுப்பை உணர்ந்து செயல்படவும், பிள்ளைகள் தமது பெற்றோர் மட்டில் உள்ள கடமைகளை உணர்ந்து வாழவும், உமது தாய் மரியாளின் முன்மாதிரியை பின்பற்றி வாழ வரம் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## 5 –ம் நிலை

வாசகம்: அப்பொழுது, அலக்சாந்தர் ரூபு ஆகியோரின் தந்தையான சிரேன் ஊரை சேர்ந்த சீமோன் என்பவர் வயல்வெளியிலிருந்து வந்து கொண்டிருந்தார். படைவீரர்கள் இயேசுவின் சிலுவையை சுமக்கும் படி அவரைக் கட்டாயப்படுத்தினார்கள்.

நிகழ்வு: சேலம் மாவட்டம், திருச்செங்கோட்டில் வேலூர் செல்லும் சாலையில் உள்ளது அம்பாள் மருத்துவமனை. மருத்துவரை பார்க்கச் சென்ற மரியாயி என்னும் பெண்மணி கழிப்பறை பக்கம் சென்ற போது அங்கே ஒரு பிஞ்சு குழந்தை அழுதுக் கொண்டிருந்ததை கண்டாள். அழகிய ஆண் குழந்தை கேட்பாரற்ற அனாதையாய்க் கிடந்தது. மருத்துவ நிர்வாகத்திடம் தகவலைச் சொல்ல காவல் துறையினர் வரவழைக்கப்பட்டனர். யாருடைய

குழந்தை என்று விசாரனை, சொல்லாதால் குழப்பம் அதிகமாகியது. என்னுடைய குழந்தை என்று யாருமே சொல்லாததால், குழந்தையை கண்ட மரியாயி, இந்த குழந்தையை நான் வளர்க்கிறேன். என்ற தனது விருப்பத்தை சொன்னாள். இந்த மரியாயிக்கு ஏற்கனவே 6 குழந்தைகள் இருக்கின்றனர். ஏழை குடும்பத்தை சார்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிந்தனை: உதவி என்பது கருணையின் வெளிப்பாடு கருணை என்பது கண்களில் வெளிப்படும் உணர்வு அல்ல. உதயத்திலிருந்து கசிகின்ற அன்பின் அடையாளம், கருணை கசிந்தால் தான், இதயம் வலித்தால் தான், இரக்கம் இருந்தால் தான் அடுத்தவரின் வலிமையை உணர்ந்திட முடியும். உதவிட முடியும். இன்றைக்கு பக்கத்து வீடு தீப்பிடித்தால் கூட வேடிக்கைப் பார்க்கிறோமே ஒழிய அணைக்க முற்படுவதில்லை. வீட்டில் வளர்க்கும் பூணை, நாய், ஆடுமாடுகள் நோய்வாய்ப்பட்டால் துடிக்கும் பல பேர் சக மனிதன் உயிருக்காக துடித்துக் கொண்டிருந்தாலும் இதயம் துடிக்காமலே இருக்கிறது. நாம் அடுத்தவர்கள் காயம் படும்போது ரத்தம் சிந்த தேவையில்லை. கண்ணீர் சிந்தினாலே போதும், வலியில் துடிப்பவர்களின் நாடியோடு கலக்கவில்லையென்றாலும் அவர்களின் கைகளையாவது ஆறுதலாகப் பிடிக்கின்றோமா?

செபம்: வாழ்வளிக்கும் வள்ளலாகிய இறைவா! துன்பத்தால் துணையின்றி உதவிக்காக ஏங்குவோருக்கு உதவிக்கரம் நீட்டி கிறிஸ்துவுக்காக, சீமோன்களாக நாங்கள் ஒவ்வொருவரும் வாழ்ந்திட வரம் தாரும்

## 6 –ம் நிலை

வாசகம் : அதற்கு நேர்மையாளர்கள் ஆண்டவரே எப்பொழுது உம்மை பசியுள்ளவராக கண்டு உணவளித்தோம். அல்லது தாகமுள்ளவராக கண்டு உமது தாகத்தை தணித்தோம்? எப்பொழுது உம்மை அன்னியராக கண்டு ஏற்றுக்கொண்டோம்? அல்லது சிறையில் இருக்க கண்டு உம்மை தேடிவந்தோம்? என்று கேட்பார்கள். அதற்கு அவர் மிக சிறியோர் ஆகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்கு சொல்கிறேன் என பதிலளிப்பார்.

நிகழ்வு: மகாராஷ்டிரா மாநிலம் அவுரங்கபாத் என்ற இடத்தில் 15 வயது பள்ளி மாணவிக்கு திருமணம். அந்த மாணவிக்கு திருமணம் நடத்த பெற்றோர்கள் கட்டாயப்படுத்தினார்கள். அந்த மாணவியின் வகுப்புத் தோழிகள் இந்த திருமணத்தை நடத்தக் கூடாது என்று தடுத்தனர். காரணம் எங்கள் தோழி ஒரு சிறுமி, திருமணம் செய்து கொள்ளக் கூடிய வயதை அடையவில்லை. அப்படி திருமணம் செய்வது சட்டப்படி குற்றம் என்ற வாசகங்களை எழுதி, போராட்டம் நடத்தினார்கள், தங்கள் தோழியை காப்பாற்றினார்கள். நமது பள்ளிகள் - அன்பியங்கள் வாழ்வளிக்கும் தளங்களா? எப்படி?

சிந்தனை: சுடும் வரை நெருப்பு, சுற்றும் வரை பூமி, போராடும்வரை மனிதன் என்றுசொல்வார்கள். போராட்டம் இல்லாத மனிதனுடைய வாழ்வு நீரோட்டமும், வேரோட்டமும் இல்லாது காய்ந்துப் போன செடியைப் போல் ஆகும். தன்மானம் இல்லாதவர்களும், இலட்சியங்களை அடைய வேண்டிய வீரம் இல்லாதவர்களும், போராட்டங்களை நேசிப்பதில்லை. சிம்மாசனத்தை அடைந்தவர்களும் சிகரங்களைத் தொட்டவர்களும் போராட்டத்தை சந்தித்தவர்களே. கிறிஸ்தவ வாழ்வு என்பது சுயநல வட்டங்களை கடந்து வந்த சமுதாய நலத்திட்டங்களில் பங்கெடுப்பதே. மடிகின்ற மனித

நேயங்களை காப்பாற்றுவதில் தோள்களை கொடுப்பது. கோழைகள் எப்போதும் போராட்டத்திற்கு எதிரிகளே. கிறிஸ்தவர்கள் கோழைகள் அல்ல. நீதியை நலைநாட்டும் போராளிகளாக செயல்பட வேண்டும்

செபம் 6: அன்பான இயேசுவே! சமுதாயத்தின் அடக்குமுறைகளைக் கண்டு அஞ்சாது, எமது சகோதரிகளின் உரிமைகளுக்காகப் போராடுகின்ற துணிவையும், பிறருக்கு உதவிக்கரம் நீட்டும் நல்ல மனநிலையையும் அனைவர்க்கும் தாரும்.

7 –ம் நிலை

வாசகம்: உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்: நீங்கள் அழுவீர்கள் புலம்புவீர்கள்: அப்போது உலகம் மகிழும். நீங்கள் துயருறுவீர்கள். ஆனால் உங்கள் துயரும் மகிழ்ச்சியாக மாறும். இப்போது நீங்களும் துயருறுகிறீர்கள். ஆனால் நான் உங்களை மீண்டும் காணும் போது உங்கள் உள்ளம் மகிழ்ச்சி அடையும். உங்கள் மகிழ்ச்சியை யாரும் உங்களிடமிருந்து நீக்கிவிட முடியாது.

நிகழ்வு: சென்னையில் மாநில அளவிலான தடகள போட்டி நேரு ஸ்டேடியத்தில் நடந்தது. பல வீரர்களும், வீராங்கனைகளும் அதில் பங்கெடுக்க வந்தனர். போட்டியை காணவும் பல பார்வையாளர்கள் குவிந்திருந்தனர். ஆனால் எல்லோரையும் கவர்ந்த போட்டி பெண்ளுக்கான 5000 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் பல வீராங்கனைகளின் மத்தியில் ஒரு சிறுமி ஓடுவதற்கு நின்றிருந்தது தான். அங்கு ஓடப்போகிறவர்களின் முழங்கால் உயரம் கூட இருக்க மாட்டாள் அந்த சிறுமி. பார்வையாளர்கள் மத்தியில் இந்த சிறுமியைப் பற்றி கிண்டலான பேச்சுக்கள் வந்தன. பந்தயம் தொடங்கியது பலர் பாதியிலேயே சோர்ந்து போனார்கள், விழுந்தும் யேபானார்கள். ஆனால் அச்சிறுமியின் ஓட்டத்தில் தளர்ச்சியில்லை. கடைசியில் 5000 மீட்டர் பெண்களுக்கான ஓட்டப் பந்தயத்தில் முதலிடம் பெற்றாள். தமிழக வரலாற்றிலேயே இப்படி ஒரு சிறுமி மாநிலம் தழுவிய ஓட்டப்பந்தயத்தில் முதலிடம் பெற்றது இது தான் முதல்முறை. அந்த சிறுமியின் பெயர் சுப்புலட்சுமி, வயது 12 மட்டுமே. அச்சிறுமியின் ஊர்ப்பெயர் - “எப்போதும் வென்றான்“ பள்ளிக்கு தினமும் 3 கி.மீ சைக்கிளில் சென்ற அவளை பள்ளி ஆசிரியர் ஊக்கமூட்டியதால் இன்று தங்க மெடலைப் பெற்றாள்.

சிந்தனை: நம்மிடம் இல்லாததைக் கண்டு ஏங்க வேண்டியதில்லை. அழகாக இல்லையே, உயரமாக இல்லையே, நிறமாக இல்லையே, அதிகமாக படிக்க வில்லையே, வசதியில்லையே என்றென்லாம் நாம் தாழ்வு மனப்பான்மையில் தளர்ந்துவிட வேண்டியதில்லை. நீரில் முளைத்துவிட்டோமே என்று தாமரை வருத்தப்படாமல் நீருக்கு ஏற்றார்போல தன்னை உயர்த்திக் கொள்வதில்லையா? நீயும் நெருப்பாக மாறிடு. தோல்விகளை சுட்டெரித்து, உலகிற்கு வெளிச்சமாகு, விழுந்ததற்காக வருத்தப்படாதே. எழாமல் இருந்ததற்காக வெட்கப்படு.

செபம் 7 : எம் இனிய இயேசுவே! எங்கள் வாழ்வில் வருகின்ற எல்லாவிதமான சிலுவைகளையும் தன்னம்பிக்கையோடு சந்தித்து இலட்சிய நோக்கோடு முன்னேற்றப்பாதையில் வழி நடக்க எமது குழந்தைகளுக்கு நல்ல மனபலத்தை தாரும்.

8 –ம் நிலை

வாசகம் : பெருந்திரளான மக்களும் அவருக்காக மாரடித்துப் புலம்பி ஒப்பாரி வைத்த பெண்களும் அவர் பின்னே சென்றார்கள். இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பிஎருசலேம்

மகளிரே. நீங்கள் எனக்காக அழவேண்டாம்: மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள். ஏனெனில் இதோ ஒரு காலம் வரும். அப்போது மலடிகள் பேறுபெற்றோர் என்றும் பிள்ளை பெறாதோரும் பால் கொடாதோரும் பேறுபெற்றோர் என்றும் சொல்வார்கள்.

நிகழ்வு: திண்டுக்கல்லை சேர்ந்த நகைக்கடையின் அதிபர் பெயர் ஜேக்கப். அவருடைய மனைவியின் பெயர் மரியா. 2001 –ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் தேதி, அவருடைய குழந்தையும் தீயில் கருகி உயிர் இழந்தனர். மரியாவின் தான் சாவதற்கு முன்பாக கொடுத்த வாக்குமூலத்தில் இப்படியாகச் சொன்னார். நான் தொலைக்காட்சியில் வரும் தொடர் நாடகங்களை தினமும் பார்ப்பேன். அந்த நாடகத்தில் நடித்த ஒரு பெண் தன்னடைய கொடுமைகளைத் தாங்க முடியாமல் தீக்குளித்ததைப் பார்த்தேன். அந்த நாடகத்தோடு ஒன்றித்துப்போன நான் என்னுடைய குழந்தையோடு சேர்ந்து தீக்குளித்து விட்டேன்," என்றாள்.

சிந்தனை: பெண்ணினமே, கண்ணீரால் காவியம் படைக்க முடியாது. அழுகையை ஆயுதமாகப் பயன்படுத்தி சாதனைகளை படைக்க முடியாது. கண்ணீரும், அழுகையும் பிரச்சனைகளுக்கு முடிவு அல்ல. மூட நம்பிக்கைகளையும், நம்மை முட்டாளாக்கும் பொழுதுபோக்குகளையும் மூடி வைத்துவிட்டு முன்னேறுவதற்கான முயற்சியைத் தேடுங்கள். நிழல்களைக் கண்டு அழுது புலம்பியது போதும், அழுதவர்கள் சாதித்தது இல்லை. துணிந்தவர்களே சிகரத்தைத் தொட்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து தடைக்கற்களை படிக்கற்களாக்கி சாதிக்க முயலுங்கள் உங்கள் அழுகை மகிழ்ச்சியாக மாறட்டும்

செபம் 8: சமத்துவத்தின் நாயகனான இயேசுவே! இவ்வலகில் உமது சாயலாக ஆணையும் பெண்ணையும் படைத்தீர். எங்கள் சமுதாயத்தில் கண்ணீரிலே வாழ்க்கை நடத்தும் பெண்களின் இழிநிலைக்கு நாங்களும் காரணம் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். இனி நாங்கள் பெண்களுக்கு எதிராக நடைபெறும் கொடுமைகளை எதிர்க்கவும், நல்ல மனநிலையை எங்கள் எல்லோருக்கும் தந்தருளும்.

## 9 –ம் நிலை

வாசகம்: மேலும் அவர் பெருஞ்சுமை சுமந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன் ஆகவே என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றிக்கொண்டு என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். ஆம் என் நுகம் அழுத்தாது. என் சுமை எளிதாயுள்ளது என்றார்.

நிகழ்வு: பிறந்ததிலிருந்து மூன்று ஆண்டுகள் மட்டுமே உலகைப் பார்த்தவர். மூன்று வயதில் நடந்த ஒரு விபத்தில் பார்வையை இழந்தார். உலகமே இருட்டாக தெரிந்தாலும் உள்ளத்தில் மட்டும் நம்பிக்கை வெளிச்சத்தை ஏற்றி இருந்ததால் தன்னுடைய 15 – வயதிலே விரல்களால் தொட்டு படிக்கக் கூடிய மொழியை கண்டுபிடிக்க முயன்றார். நெடுக்காக மூன்று புள்ளி, குறுக்காக இரண்டு புள்ளி என்ற அமைப்பில் புள்ளிகளை வெவ்வேறு விதமாக வைப்பதன் மூலம் பார்வையற்றோர் படிக்கும் எழுத்துக்களை உருவாக்கினார். இந்த மாபெரும் சேவைக்கு உலகம் நன்றி செலுத்தும் விதமாக அவருடைய பெயரான ப்ரெயில் என்பதை அந்த எழுத்து முறைக்கு பெயராக வைத்தது.

சிந்தனை: ஊனம் உடலில் இருந்தாலும் விழுந்து, எழுந்து சாதனைப் படைத்தவர்களின் பட்டியல் நீளமாகவே இருக்கின்றது. ஆனால் உள்ளத்திலே ஊனமானவர்கள் சாதித்திருக்கிறார்கள் என்பதை கேள்விப்பட்டதாக தெரியவில்லை. எழுந்து நின்றவர்கள் எல்லோருமே விழுந்திருக்கின்றார்கள் என்பதை மனதில் வைத்து பயணம் செய்யும் போது நம்மாலும் இயேசுவைப் போல விழுந்தாலும் எழுந்திட முடியும்.

செபம் 9:
இறைவா! இன்பத்திலும் துன்பத்திலும், வேதனையிலும் சோதனையிலும் உம்மீது ஆழ்ந்து பற்றுறுதிக்கொள்ளும் விசுவாசத்தை எமக்குத் தந்தருளும்

## 10 –ம் நிலை

வாசகம் : இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின் படைவீரர் அவருடைய மேலுடைகளை நான்கு பாகமாகப் பிரித்து ஆளுக்கு ஒரு பாகம் எடுத்துக் கொண்டார்கள். அங்கியையும் அவர்களே எடுத்துக்கொண்டனர். அந்த அங்கி மேலிருந்து கீழ்வரை தையலே இல்லாமல் நெய்யப்பட்டிருந்தது.

நிகழ்வு: சென்னையில் உள்ள பிரபலமான ஓட்டல். 100 - பேர் வசதியாக அமரக்கூடிய குளிர்சாதன வசதியுடன் கூடிய அறை. பிரவோக் என்ற நிறுவனத்தின் தயாரிப்பான உடைகளை விளம்பரம் செய்ய பேஷன் டிராமா ஏற்பாடு செய்யப்பட்டது. புகழ்பெற்ற மாடல் மன்னர்களான ஜான் அப்ரகாம், ஜோசப் மற்றும் பல இளைஞர்களும், இளம்பெண்களும் இந்த பேஷன் டிராமாவில் பங்கெடுத்தனர். விதவிதமான ஆடைகளை உடுத்தியபடி பார்ப்பவர்கள் மத்தியில் நடந்து வந்தனர். இந்த பேஷன் டிராமாவில் வந்த இளைஞர்களும் இளம் பெண்களும் ஆடைகளை விளம்பரப்படுத்தியதை விட தங்கள் உடலை நன்றாகவே விளம்பரப்படுத்தினார்களாம்.

சிந்தனை: விளம்பரப்படுத்துகிறோம் என்று சொல்லி இன்றைக்கு உடலை காட்டி, இறைவன் தந்த பாலுணர்வுகளை பாழ்படுத்துவதும் புனிதமான உடலை கொச்சைப்படுத்துவதும் இன்றைய தொலைத்தொடர்பு சாதனங்கள் வழியாக நடந்து கொண்டிருக்கின்றன. தனது சாயலாகப் படைத்த இறைவன் நம்மிடம் கேட்பது -, உன் உடலையும், ஆன்மாவையும், தூய்மையாக வைத்திருக்கிறாயா?, நாம் எல்லோரும் இறைவனின் சாயல் என்பதை உணர்கின்றோமா, இயேசுவின் உடலை நற்கருணையாக உண்கிறோமே, நமது உடலை பரிசுத்தமாக பாதுகாக்கின்றோமா?

செபம் 10
அன்பான ஆண்டவரே, உமது அவமான நிலைகண்டு கண்ணீர் வடிக்கும் நாங்கள் எங்கள் குடுபத்திற்கும் சமூகத்திற்கும் பிறருக்கும் அவமானத்தை உருவாக்காமல் மனித மாண்புடன் பிறர்நலம் பேணும் பண்புடன் வாழ்ந்திடும் அருளை எங்களுக்குத் தந்தருளும்.

## 11 –ம் நிலை

வாசகம்: அவரைச் சிலுவையில் அறைந்த போது காலை ஒன்பது மணி. அவரது மரண தண்டனைக்கான காரணத்தை அறிவிக்க “யூதரின் அரசன்” என்று அவர்கள்

எழுதிவைத்தார்கள்: அவருடைய வலப்புறம் ஒருவனும் இடப்புறம் ஒருவனுமாக இரு கள்வர்களை அவருடன் சிலுவைகளில் அறைந்தார்கள்

நிகழ்வு: என்னை வாழவிடுங்கள் என்று பேட்டி தந்தவரின் பெயர் 1980 களில் தமிழகத்தையே கலக்கிய ஜெய பிரகாஷ்? 100 - வது நாள் என்ற சினிமா படத்தை பார்த்து, தனது அக்கா, மாமா, அவர்களின் குழந்தைகள் என 9 பேரைக் கொன்றவன். உயர்நீதின்றத்தில் தூக்குதண்டனை விதிக்கப்பட்டு. பிறகு உச்சநீதிமன்றத்தால் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டு, நன்னடத்தையின் காரணமாக 1996-ம் ஆண்டு செப்டம்பர் 5-ம் தேதி விடுதலை செய்யப்பட்டவர். நான் ஏதோ ஒரு குழப்பத்தில் புத்தி தடுமாற்றத்தில் அப்படி செய்து விட்டேன். ஆனால் இப்போது நான் முழுமையாக மாறிவிட்டேன். ஆனால் நான் வேலைக்கு போனால் வேலை கொடுப்பதில்லை. என்னைப் பார்த்தாலே பயந்து ஓடுகின்றார்கள். கேவலமாக பார்க்கின்றார்கள். இதைவிட நான் தூக்கிலேயே தொங்கியிருக்கலாம் என்று வேதனையோடு சொல்லி பேட்டி எடுத்தவர்களின் கைகளைப் பிடித்துச் சொன்னார். என்னை வாழவிடுங்கள்.

சிந்தனை: கடிதங்கள் மீது அடிக்கப்படும் முத்திரைகளை விட அடுத்தவரின் இதயங்கள் மீது அச்சடிக்கப்படும் முத்திரைகளே அதிகம், வீச்சு அரிவாளால் கொலை செய்யப்பட்டவர்களை விட நமது நச்சுப் பேச்சால் செத்துப் போனவர்கள் அதிகம். முகத்தில் எறிந்த கல்லின் காயத்தையும் வலியையும் விட சொல்லினால் இதயத்தில் விழுந்த அடியும் இடியும் கொடியது என்பதை நாம் உணர்ந்திருக்கிறோமா?

செபம் 11: அன்பான இறைவா! உமது மதிப்பீடுகளான அன்பு, நீதி, சமத்துவம், சகோதரத்துவம் போன்றவற்றிற்கு எதிராக அணி திரளும்போதெல்லாம் உம்மை சிலுவையில் அறைகிறோம் என்பதை உணர்ந்து உமது மதிப்பீடுகளின்படி வாழ எங்களுக்கு அருள் தாரும்.

## 12 –ம் நிலை

வாசகம்: நண்பகல் வந்தபொழுது நாடெங்கும் இருள் உண்டாயிற்று. பிற்பகல் மூன்று மணிவரை அது நீடித்தது. பிற்பகல் மூன்று மணிக்கு இயேசு “எலோயி! எலோயி லெமா சபக்தானி?” என்று உரக்கக் கத்தினார். “என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?” என்பது அதற்குப் பொருள். சுழ நின்று கொண்டிருந்தவர்களுள் சிலர் அதைக்கேட்டுஇ “இதோ! எலியாவைக் கூப்பிடுகிறான்” என்றனர். அப்பொழுது அவர்களுள் ஒருவர் ஓடிச்சென்று கடற்பஞ்சை எடுத்து, புளித்த திராட்சை இரசத்தில் தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி அவருக்குக் குடிக்கக் கொடுத்துக்கொண்டே, “பொறுங்கள், எலியா இவனைக் கீழே இறக்க வருவார், பார்ப்போம்” என்றார். இயேசுவோ உரக்கக் கத்தி உயிர் துறந்தார்.

நிகழ்வு: 1900 –ல் நெசவுத் தொழிலாளர்களின் மகனாகப் பிறந்து குருத்துவ பயிற்சியை பெற்று 6 ஆண்டுகள் குருவாக ஜப்பானில் பணியாற்றி, 1939 –ல் தம் சொந்த நாட்டிற்கு வந்து, யூத அகதிகளைத் துணிவுடன் கண்காணித்து வந்தார் அந்த குருவானவர். இதைக்கண்ட ஜெர்மனியர், அந்த குருவானவரை கைது செய்தனர். கொடுமைகள் நிறைந்த சிறையில் அடைத்தனர். சித்தரவதை செய்தனர். 1941 –ம் ஆண்டு ஜீலை மாதம் அச்சிறையிலிருந்து ஒருவர் தப்பியோடியதற்காக தவறு செய்யாத 10 சிறைக்கைதிகளைக் கொல்வதற்காக சிறை அதிகாரி கொண்டு போன போது 10 பேரில்

ஒருவரான 41 வயதுள்ள பிரான்சிஸ் கஸோனி செக், தனது மனைவி , இரு பிள்ளைகளை நினைத்து கதறினான், துடித்தான். அப்போது அந்த குருவானவர் சிறையதிகாரியிடம் பிரான்சிஸ் கஜோனிக்காக நான் சாகிறேன். அவரை விட்டு விடுங்கள் என்றார். பிரான்சிஸ் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். உணவின்றி தண்ணீரின்றி சித்தரவதை செய்யப்பட்டு கார்பாலிக் அமிலத்தை உடலில் ஏற்றிக் கொலை செய்தனர். அந்த குருவானவரின் பெயர் மாக்சிமிலியன் கோல்பே ஆகும்.

சிந்தனை: மனனே! மகளே!! என் மரணம் உனக்காக, உன் மரணம் யாருக்காக?

செபம் 12 : அன்பின் இறைவா! உமது மகனின் இறப்பை நினைத்து அழுது புலம்பிவிட்டு சென்று விடாமல், எங்களுடைய முரண்பாடான வாழ்வை நினைத்து கண்ணீர்விடவும், எல்லோரும் வாழ்வு பெறவேண்டும் என்ற தணியாத தாகம் எங்கள் உள்ளங்களில் உருகிட அருள்தாரும

13 – ம் நிலை

வாசகம்: அவர் இவற்றைச் சொல்லிக் கொண்டிருந்தபோது, கூட்டத்திலிருந்து பெண் ஒருவர், “ உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்” என்று குரலெழுப்பிக் கூறினார்.
நிகழ்வு: ஒரு வீட்டில் தாய் தனது ஒரு வயது குழந்தையுடன் தூங்கிக் கொண்டிருந்தார். கருந்தேள் அந்த தாயை கொட்டியது. துடித்து போனார் அந்த தாய். இறப்பின் வாசலுக்கே சென்றதாக அனுபவித்தார். சற்று வலி குறைந்தவுடன் அவர் ‘‘இறைவா இக்கருந்தேள் என் குழந்தையை கொட்டாமல் என்னை கொட்டியதற்காக உமக்கு நன்றி என்று உணர்ச்சி பொங்க கூறினார்.

சிந்தனை: தாய் என்றால் இரக்கத்தின் சின்னம், உன்னத அன்பின் உண்மை வெளிப்பாடு. தனது கடைசி கண்ணீர் துளிகள் வரை பிள்ளைகளுக்காக சேகரித்து தனது கனத்த வியர்வை துளிகளால் கல்மனதை கரைய வைப்பவள் தாய். தனக்கு உணவு இல்லையெனினும் தன் பிள்ளைகளின் வயிறு நிறைவதிலேயே தன்னை நிறைவு செய்பவள் தாய். தாய் தியாகத்தின் சின்னம், இதோ இங்கே - சிதைக்கப்பட்ட ஓவியமாய் - உரித்து போட்ட நாராய் - உலர்ந்து போன மைந்தனை மடியில் கிடத்தியவராய் - கண்ணீர் கடலை சொரிந்தவராக மடியில் சுமக்கிறார் அன்னை மரியா. ஆசீர்வதிக்கபட்டவர் இங்கே அவல நிலைக் காண்கிறார். இயேசுவின் வார்த்தைகளை இதயத்தில் சுமந்தவர் இன்று அவரது உடலை மடியில் சுமக்கிறார் அன்னை மரியா. பத்து மாதம் கருவில் சுமந்தவர் பட்டு போன மகனை மடியில் சுமக்கிறார். “இதோ உன் தாய்” என்று சிலுவையில் குற்றுயிராய் தொங்கிக்கொண்டு இயேசு கூறியது - “நமக்கு ஒரு தாய் தரப்பட்டிருக்கிறார், இவர் தியாகத்தின் சின்னம்” என்று பொருள். நண்பனே! உனது தாயை நீ பெருதுமைப்படுத்துகிறாயா? அல்லது சிறுமைப்படுத்துகிறாயா?
செபம் 13
வியாகுலமுள்ள மரியாயே! உம்முடைய துக்க துயரத்திற்குக் காரணம் நாங்கள் தானல்லவோ! உம் நேசக் குமாரனை சிலுவையில் அறைந்ததினால் உம்முடைய திருஇதயத்தை குத்தி ஊடுருவினது எங்கள் பாவம் என்ற வாள்தானே. தயாளமுள்ள தாயே உமது மக்களுக்காக உம்மிடம் ஒப்படைக்கப்பட்ட எங்களுக்காக உம் திருமகனிடம் பரிந்து பேசும்.

## 14 –ம் நிலை

வாசகம்: மாலை வேளையானதும் அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்னும் பெயா் கொண்ட செல்வர் ஒருவர் அங்கே வந்தார். அவரும் இயேசுவுக்குச் சீடராய் இருந்தார். அவர் பிலாத்திடம் போய் இயேசுவின் உடலைக்கேட்டார். பிலாத்தும் அதைக் கொடுத்துவிடக்கட்டளையிட்டான். யோசேப்பு அவ்வுடலைப்பெற்று, தூய்மையான மெல்லிய துணியால் சுற்றி தமக்கெனப்பாறையில் வெட்டியிருந்த புதிய கல்லறையில் கொண்டுபோய் வைத்தார்: அதன் வாயிலில் ஒரு பெருங்கல்லை உருட்டி வைத்துவிட்டுப் போனார். அப்பொழுது மகதலா மரியாவும் வேறொரு மரியாவும் அங்கே கல்லறைக்கு எதிரே உட்கார்ந்திருந்தனர்.

சிந்தனை:
அன்பை விதைத்தவருக்கு அருளை கொடுத்தவருக்கு வாழ்வை கொடுத்தவர்க்கு வாழ்வாக மாறியவர்க்கு ஏன் இந்த கொடூரம்? உயிர்ப்பும் உயிரும் நானே என்ற உண்மையை எடுத்துரைத்த இறைமகன் இயேசு இருட்டறையில் - கல்லறையில் புதைக்கப்படுகிறார்.
வாழ்க்கையில் கல்லறை முற்றுப்புள்ளியாகக் கருதப்படுகிறது. கல்லறைக்கு செல்லுமுன் எதையெல்லாம் செய்ய முடியுமோ, எப்படியெல்லாம் வாழ முடியுமோ அதையெல்லாம் செய்து விடத் துடிக்கிறான் மனிதன். அடுக்கு மாடிகளைக் கட்டுகிறாய். ஏக்கர் கணக்கில் நிலங்களை மடக்குகிறாய். கோடிக்கணக்கில் பணத்தைக் குவிக்கிறாய். கடைசியில் அடங்கி ஒடுங்கி இந்த ஆறடி மண்ணுக்குள் செல்கிறான். கல்லறைக்குச் செல்லுமுன் வாழ்வின் பயன் என்ன என்பதை கொஞ்சம் யோசித்துப் பார். உன்னால் இந்த உலகம் கண்ட பயன் என்ன என்பதை வாசித்து பார். நாம் ஒவ்வொரு நாளும் உண்மைகளையும், உறவுகளையும் புதைக்கின்றோமா? அல்லது விதைக்கின்றோமா? பிறரின் உரிமைகளையும் உணர்வுகளையும் மதிக்கின்றோமா? அல்லது புதைக்கின்றோமா? எதை நாம் புதைக்கின்றோம்? எதை நாம் விதைக்கின்றோம்? சிந்திப்போம். மறுக்கப்படுகின்றபோது இயேசு மீண்டும் கல்லறையில் புதைக்கப்படுகின்றார்.

செபம் 14: எங்கள் இனிய இயேசுவே! எங்கள் அன்றாட வாழ்வில் உறவுகளையும் உயிர்களையும் புதைக்காமல் கெட்ட எண்ணங்களையும் பொய்மைகளையும் புதைத்து, உண்மைக்கு உயிர்கொடுத்து உம்மை இவ்வுலகிலே வாழ வைக்க எங்களுக்கு உதவியருளும்.